**44வது FIDE உலக செஸ் ஒலிம்பியாட் 2022**

பிரெஞ்சு(French ) சுருக்கமான FIDE என பொதுவாகக் குறிப்பிடப்படும்,சர்வதேச சதுரங்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 44வது சதுரங்க ஒலிம்பியாட், இந்தியாவின் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் 28 ஆடி 2022 முதல் ஆவணி 10 வரை நடைபெறும். சதுரங்க ஒலிம்பியாட் என்பது ஒரு உன்னதமான உலகளாவிய நிகழ்வாகும், இதில் மிக சிறந்த போட்டியாளர்கள் அவர்களது நாடுகளுக்காக ஒருவருக்கொருவர் போட்டியிடுகிறார்கள். இது வலுவான தேசிய அணிக்கு முடிசூட்டுவதுடன் தெரிவு செய்யப்பட்ட அணி அந்தக் காலத்திற்குரிய சிறந்த சதுரங்க அணியாகவும் FIDE இன் வெற்றி அணியாகவும் கருதப்படும்.

முதலாவது அதிகாரப்பூர்வமற்ற சதுரங்க ஒலிம்பியாட் 1924 இல் பாரிஸில் (Paris )நடந்தது. அதன் பிறகு சதுரங்க ஒலிம்பியாட் ஆண்டுதோறும் நடைபெற்றது, இது இறுதியில் 2022க்கான 44வது சதுரங்க ஒலிம்பியாட்டிற்கு வழி வகுத்தது. சதுரங்க ஒலிம்பியாட் 2022 முதலில் ரஷ்யாவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தாலும், பின்னர் அது இந்தியாவின் Four Points by Sheraton Mahabalipuram Resort & Convention Centre க்கு மாற்றப்பட்டது. தங்கப் பதக்கங்கள், trophies மற்றும் வெற்றியாளர்கள் என்ற பட்டத்திற்காக பல நாடுகள் போட்டியிடும் இந்த பாரம்பரிய நிகழ்வுக்கான அதிகாரப்பூர்வ இடமாக , சென்னையின் புகழ்பெற்ற கடற்கரை கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு வசதியான இடத்தில் இந்த இடம் அமைந்துள்ளது .

இந்த நிகழ்வு ஆடி 28 ஆம் தேதி சென்னையில் ஒரு பிரமாண்டமான தொடக்க விழாவுடன் தொடங்கும், இந்த நிகழ்வில் அரசியல் மற்றும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பல பிரபலங்கள் கலந்து கொள்கின்றனர். ஆடி 29 முதல் ஆவணி 9 வரை மொத்தம் 11 போட்டிகள் நடைபெறும், ஆவணி 4ம் திகதி ஓய்வு நாளாகும். அனைத்து நாட்களிலும் நடைபெறும் போட்டிகள் இந்திய நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு தொடங்கும். போட்டியாளர்கள் ஒவ்வொருவருக்கும் முதல் 40 நகர்த்தல்களுக்கு 90 நிமிடங்கள் வழங்கப்படும், அதைத் தொடர்ந்து மிகுதி 30 நிமிடங்களுக்கு நகர்வு 1-ல் தொடங்கி ஒரு நகர்வுக்கு 30 வினாடிகள் அதிகரிக்கும்.

இந்த மாபெரும் போட்டியில் இலங்கை, சீனா, அமெரிக்கா, இந்தியா, கென்யா மற்றும் பல நாடுகள் உட்பட உலகெங்கிலும் உள்ள அணிகள் பங்கேற்கின்றன. திறந்தி பிரிவில் 188 அணிகளும், பெண்கள் பிரிவில் 162 அணிகளும் இந்தப் போட்டியில் நேருக்கு நேர் போட்டியிட உள்ளன.
நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த போட்டியில் பங்கேற்கும் இந்த வருடத்தின் இலங்கை நட்சத்திரங்கள் இவர்கள் தான் ,

திறந்த பிரிவு :
1.IM எல் எம் எஸ் ரி டி சில்வா
2.FM ரனிந்து டில்ஷான் லியனகே
3.FM .இசுறு அழகக்கோன்
4.கே ஜி ரி எஸ் டி கிரியெல்ல
5.நபில் நாசர் மொகமட்

பெண்கள் பிரிவு :
1.WIM சச்சினி ரணசிங்க
2.தேசாந்தி ஷிஹன்ச கமகே
3.ஜனந்தனி அபேசிங்க
4.WCM பசிந்தி யாத்ரா விஜேசூரிய
5.WCM மினெத்மா லசந்தி விக்கிரமசிங்க

திறந்த பிரிவு மற்றும் பெண்கள் பிரிவு இரண்டிற்கும் ஒரு அணியில் 4 போட்டியாளர்கள் மற்றும் ஒரு மேலதிக போட்டியாளர் இருப்பார்கள். குறித்த சுற்றின் முடிவுகள் Game points ஆல் தீர்மானிக்கப்படுகின்றன .ஒவ்வொரு சுற்றின் வெற்றிக்கும் 2 புள்ளிகள் ,தோல்விக்கு 0 புள்ளிகள் மற்றும் சமநிலைக்கு 1 புள்ளிகள் வழங்கப்படும் அதிக Game points கொண்ட அணி போட்டியில் வெற்றி பெறுகிறது, இதன் விளைவாக அந்த அணி குறிப்பிட்ட வெற்றிக்கு இரண்டு Match points ஐ பெறும். போட்டியின் முடிவில் அதிக Match points ஐ பெற்ற அணி ஒலிம்பியாட் வெற்றியை பெற்றுக்கொள்கிறது.

திறந்த பிரிவில் முதலாம் இடம் பெறுவோர் Hamilton-Russel கிண்ணத்தையும், பெண்கள் பிரிவில் முதலிடம் பெறுபவர்கள் Vera Menchik கிண்ணத்தையும்பெறுவார்கள். திறந்த மற்றும் பெண்களுக்கான போட்டிகளின் ஒருங்கிணைந்த பெறுபேறுகளிற்கு அமைய அவர்களது சம்மேளனமும் தரவரிசைப்படுத்துகிறது. ஆகவே இதில் 1 வது இடம் பெறுபவர்கள் Nona Gaprindashvili Trophy ஐ பெறுகிறார்கள். போட்டியின் முடிவில் முதல் மூன்று அணிகளைச் சேர்ந்த வீரர்கள் Performance ratings ஐ பொறுத்து பரிசு மற்றும் பதக்கங்களையும் பெறுவார்கள்.

Chessbase India மூலம் போட்டிகள் இந்தியாவில் நேரடியாக ஒளிபரப்பப்படும். தேசிய ஒளிபரப்பு நிறுவனமான தூர்தர்ஷன் (Doordarshan) நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்பும்.